சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.48/2024

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 20–ம் நாள் பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – சித்திரைச்சாமி (Dw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் பிரதிவாதி. பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பிராது தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1ம் வாதி சோலைராஜ் எனது மகன். இரண்டாம் வாதி எனது மனைவி. சொத்தை 1984 ல் நான் கிரையம் வாங்கினேன். சொத்தை கிரையம் வாங்கிய கால கட்டத்தில் எனது மனைவி கிரையத் தொகையில் பாதியை கொடுத்தார் என்றால் நகையாக கொடுத்தார். நகையை விற்பனை செய்த பணத்தில் இருந்து கிரையத் தொகையில் பாதியை அவர் கொடுத்தார். நான்

வைத்திருந்த தொகையை வைத்தும் கிரையம் வாங்கினேன். பல நபரிடம் நான் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும், வாதிகளும் தனித்தனியாக குடித்தனம் நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறோம். தாவா சொத்தில் வாதிகள் தலா 1 பங்கு கேட்கிறார்கள். நான் தாவா சொத்துக்களை விற்பனை செய்து வாதிகளை மோசடி செய்யும் எண்ணத்தில் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்கினை ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் கோரும் பாகத்தை கொடுக்க தயாராக உள்ளேன்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.